மசோதா எண் 16/70) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ் நாடு 1970–ம் ஆண்டு மின்சாரத் தீர்வை (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 12/70)

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பேரவைத் தலேவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 12/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

பிற்பகல் 1-00 யூனிட் ஒன்று 15 காசுக்கு மேற்பட்ட விலேயில் விற்கப்படும் மின்சக்திக்காக ஒரு யூனிட்டுக்கு 3 காசு வீதம் கணக்கிடப்பட்ட தீர்வையை, உரிமை தாரர் ஒவ்வொருவரும் மாநில அரசுக்குச் செலுத்த வேண்டும். தமிழ் நாடு மின்சார வாரியத்தின் வருவாயை அதிகரிக்கும் நோக்குடன், உரிமை தாரர்களுக்குப் பெருமளவில் வழங்கப்படும் மின்சக்திக்கான கட்டண வீதங்கள் 1969, நவம்பர் 1-ம் நாள் முதல் உயர்த்தப்பட்டன. அதன் விளேவாக, தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து மின்சக்தி வாங்கு வதற்காகச் செலுத்த வேண்டிய கூடுதல் தொகைகளே ஈடு செய்வதற் காக, சில உரிமைதாரர்கள் மின்சாரம் பயன்படுத்தும் பல்வேறு வகை யினருக்கான மின்சாரக் கட்டணவீதங்களே உயர்த்தியுள்ளனர். குறைந்த அழுத்த மின்சக்தி பயன்படுத்துபவர்களுக்கும், தெரு விளக்குகளுக்கும் இந்த மின்சாரக் கட்டண வீத உயர்வு மிகவும் அதிகமாக உள்ளது. எனவே வரிக்குட்பட்ட யூனிட்டுக்கு பதினைந்து காசிலிருந்து, யூனிட்டுக்கு 18 காசாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. அப்போதுதான் உரிமை தாரர்கள் குறைந்த அழுத்த மின்சக்தி பயன்படுத்துவோருக்கும், தெரு விளக்குகளுக்கும் உரிய கட்டண வீதங்களேக் குறைக்க இயலும். இத் திருத்தத்தை 1–11–1969 முதற் கொண்டே செயலுக்குக் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.

இம்மசோதாவை இப்பேரவை ஏற்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. நா. காசிராமன் : பேரவைத் தலேவர் அவர்களே, இந்த எலக்ட்ரிசிடி ட்யூடி ஆக்டைப் பார்க்கும்போது—15 காசில் இருந்து 18 காசாக உயர்த்தியிருப்பதனுல் என்ன ஆகும் என்று சம்பந்தப்பட்டவர்களே நான் விசாரித்தேன். இதன் மூலமாக குறைந்த அழுத்த மின் சக்தியைப் பயன்படுத்துபவர்களுக்கு, விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கட்டண வீதங்களேக் குறைக்க வாய்ப்பு இருக்கிறது. இவர்களுக்கு எல்லாம் சில சலுகைகளே எல்லாம் அளிக்க முடியும் என்று அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். இந்த மசோதாவை நிறைவேற்றுகின்ற இந்த நேரத் தில் அந்த வாய்ப்புகளே இந்த அரசு நல்ல முறையில் கவனித்து —விவசாயிகளுக்கு—குறைந்த அழுத்த மின்சக்தியைப் பயன்படுத்துவோர் களுக்கு அத்தகைய சலுகை கிடைக்கும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்கிற கருத்தை அரசுக்குக் கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : மதிப்பிற்குரிய தலேவர் அவர்களே, இதில் என்னுடைய கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். நமது முதல் அமைச்சர் அவர்கள் 10 பைசா கட்டணத்தை 9 பைசாவாகக் குறைத்தது சேலம், கோயம்பத்தூர், தர்மபுரி ஆகிய 3 மாவட்டங்களுக்கு மட்டும்தான்.........

மாண்புமிகு பேரவைத் தலேவர் : 75 அடி ஆழத்திற்கு மேல் உள்ள கிணறுகளுக்கு அந்த 1 பைசா சலுகை அளித்த விஷயம் வேறு.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தனிப்பட்ட கார்ப்பரேஷன் மூல மாகப் பேசப்பட்டபோது இந்த மாதிரி சலுகை கொடுத்தால் லோ டென்ஷன் கட்டணத்தைக் குறைக்கிறோம் என்று உறுதி கொடுத்திருக்

* 1970 ஏப்ரல் 3-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.